**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 08ம் நாள்
**இ.ம.எண். 3/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 26/2019**

மோகன்தாஸ் ..மனுதாரர்கள்/வாதி

//எதிர்//

சரவணன் ..எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 20.09.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.R.சரவணகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சங்கரன் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று 24.09.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் சில சாட்சியங்களையும், ஆவணங்களையும் தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால் இம்மனுதாரர் /வாதியை Recall செய்ய உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் வாதி ஆவார். பிரதிவாதிக்கு எதிராக விளம்பல் மற்றும் இழப்பீட்டு தொகைக்கான ரூபாயை வசூல் செய்ய வேண்டியும் தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது தனக்கு முழு உரிமையுடையது மற்றும் வசமும் தன்னிடம் தான் உள்ளது என்றும், இவ்வாறான தருவாயில் எதிர்மனுதாரர் வழக்கு சொத்து அவருக்கு உரிமையுடையது போல் வழக்குத் தாக்கல் செய்து கட்சி நடத்தி வருவதாகவும், வழக்கு சொத்திற்கு மோசடியாக அவரது பெயருக்கு வருவாய்

ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டு உரிமை கோரி வருவதாகவும், வழக்குச் சொத்திற்கு மூல ஆதரவாக பதிவு பெற்ற ஆவணம் அவரது பெயரில் எதுவும் ஏற்படவில்லை என்றும், இவ்வாறான சூழ்நிலையில் வழக்குச் சொத்தைப் பொறுத்து புல எண்.458/15 ற்கான பதிவுகள் குறித்து தனது தரப்பில் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்து குறியீடு செய்ய உள்ளதால் தன்னை விசாரிக்க Recall செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே, வாதியை Recall செய்ய உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிருரையின் சுருக்கம்</u> :

3. இம்மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. அபிடவிட்டில் கூறியுள்ள காரணங்களை மறுப்பதாகவும், மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் இவ்வழக்கில் நிரூபணம் செய்ய வேண்டிய சொத்துரிமை மற்றும் அனுபவம் குறித்து எந்த குறிப்பும் இல்லை என்றும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணம் அவசியமில்லை என்றும், இருதரப்பு விசாரணை முடிந்து அசல் வழக்கு வாதி தரப்பு வாதத்திற்காக போடப்பட்டுள்ள நிலையில் காலதாமதப்படுத்தும் கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் மோசடியாய் ஓர் பட்டாவினை தயார் செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள நிலையில் அந்த மோசடி பட்டாவினை உண்மை என நிரூபிக்கும் வகையில் மனுதாரர் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனை நிரூபிக்க வாதி எந்த முயற்சியும் செய்யவில்லை என்றும், தேவையில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து வழக்கில் வீண் குழப்பத்தை ஏற்படுத்த மனுதாரர் முயன்று வருவதாகவும், அபிடவிட்டில் எந்த காரணமும் இல்லாமல் Reopen மனு செய்து விட்டு பிற்பாடு Recall மனு மற்றும் ஆவணம் தாக்கல் செய்ய வேண்டும் என மனு செய்துள்ளது முறையற்றது என்றும், எனவே, இம்மனுவினை கூடுதல் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**தீர்வு:**

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்பல் பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது மனுதாரரருக்கு முழு உரிமையுடையது மற்றும் வசமும் தன்னிடம் தான் உள்ளது என்றும், வழக்கு சொத்திற்கு மோசடியாக எதிர்மனுதாரரின் பெயருக்கு வருவாய் ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டு உரிமை கோரி வருவதாகவும், வழக்குச் சொத்திற்கு மூல ஆதரவாக பதிவு பெற்ற ஆவணம் எதிர்மனுதாரரின் பெயரில் எதுவும் ஏற்படவில்லை என்றும், இவ்வாறான சூழ்நிலையில் வழக்குச் சொத்தைப் பொறுத்து புல எண்.458/15–க்கான பதிவுகள் குறித்து மனுதாரர் தரப்பில் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்து குறியீடு செய்ய உள்ளதால் தன்னை விசாரிக்க மீண்டும் அழைத்து செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் இவ்வழக்கில் நிரூபணம் செய்ய வேண்டிய சொத்துரிமை மற்றும் அனுபவம் குறித்து எந்த குறிப்பும் இல்லை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணம் அவசியமில்லை என்றும், இருதரப்பு விசாரணை முடிந்து அசல் வழக்கு வாதி தரப்பு வாதத்திற்காக போடப்பட்டுள்ள நிலையில் காலதாமதப்படுத்தும் கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் தரப்பில் வழக்குச் சொத்தைப் பொறுத்து புல எண். 458/15–க்கான பதிவுகள் குறித்து மனுதாரர் தரப்பில் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்து குறியீடு செய்ய உள்ளதால் தன்னை விசாரிக்க மீண்டும் அழைத்து செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் இந்த வழக்கினை அலைக்கழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது வாதுரைக்காக போடப்பட்டுள்ள நிலையில் மேலும் ஆவணங்களை குறியீடு

செய்வதற்காக வாதியை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார். மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாக உள்ளது என நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், மனுதாரருக்கு அவரது தரப்பு வழக்கை நிரூபிக்க போதிய வாய்ப்பு அளிப்பதே நீதி நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்டமும் ஏற்படாது. எனவே, இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுதொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 24.09.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI
Date: 2025.09.24 14:31:03 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI
Date: 2025.09.24 14:31:08 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**